அ. அறிவிப்பு.

ஓர் உறுப்பினருடைய குற்றச்சாட்டை விசாரிக்க குழுவை அமைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசம்பந்தன் அவர்கள் கீழ் வெண்மணிச் சம்பவத்தில் காங்கிரஸ் காரர்கள் தான் முன் நின்று நடத்தினுர்கள் என்ற குற்றச்சாட்டைச் சொன்ஞர்கள். அதைக் காங்கிரஸ் கட்சித் தரப்பிலே எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் மறுக்கிருர்கள். அதற்குப் பொறுப்பேற்றுக் கொள்ளுகிறேன் என்று திரு. ஞானசம்பந்தன் அவர்கள் கூறுகிருர்கள். எப்படி அவர்கள் பொறுப்பேற்றுக் கொள்ளுவார் என்பது பற்றிய விவாதம் வந்திருக்கிறது. நம்முடைய சட்ட மன்ற விதி முறைகளையொட்டி நம்முடைய மன்றத்தி லேயே ஒரு கமிட்டி அமைத்து அந்தக் கமிட்டியிலே மாண்புமிகு உறுப் பினர் அவர்கள் தாம் சாட்டிய குற்றச்சாட்டுக்கு ஆதாரங்கள் கூற வேண்டு மென்றும் அதையொட்டி வருகிற நிகழ்ச்சியைக் கமிட்டி முடிவ செய்ய வேண்டுமென்றும் விதிமுறைகள் இருக்கின்றன. அதையொட்டி நட வடிக்கை எடுத்துக் கொள்ளப்படும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. டி. மார்டின் : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார். அதிகாரி களைப் பற்றி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் புகார் கூறுகின்ற நேரத்தில் ஆதாரங்கள் இருக்கின்றனவா என்று கேட்கப்படுகிறது. இதே முறையில் 1958 மார்ச் 18-ம் தேதி அன்று காலஞ்சென்ற முதலமைச்சர் அவர்கள் போலீஸ் துறையைப் பற்றிப் பேசுகிறபோது அவர்கள் கூறியதை எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன் . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்ருல் எப்போது விதிமுறைகள் மீறப்படுகின்றனவோ, அப்போது அந்த நேரத்தில் அதைச் சுட்டிக் காட்ட வேண்டும். அப்போது அவர்கள் சொன்ஞர்களே, அப்போது அவர்கள் இப்படிப் பேசியிருக்கிருர்களே, ஆகவே இப்போது அப்படிப் பேசுவதற்கு மறுப்பானேன் என்று கேட்பது பாயின்ட் ஆஃப் ஆர்டர் அல்ல.

3. 1969-70-ம் ஆண்டிற்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

திரு. பி. ஜெயராமன் : தலைவர் அவர்களே, இந்த நாட்டிலே மண் குடிசைகளில் வாழ்கிறவர்களும் பாராள முடியும் என்று சரித்திரத்தை மாற்றியமைத்துவிட்டு இன்று நம்மை யெல்லாம் விட்டுப் பிரிந்திருக்கும் உலகப் பேரொளி அறிஞர் அண்ணு அவர்களுக்கு எனது நன்றியை தெரிவித்துக்கொண்டு இம் மானியத்தின் மீது என் கருததுக்கள் சிலவற் றைக் கூற விரும்புகிறேன். கடந்த இருபது ஆண்டுகளாக ஆதித்திராவிட மக்களுக்குச் செய்ய முடியாத சிறப்பான காரியங்கள் இன்றைய தினம் கொண்டுவரப்பட்டிருக்கிற மானியக் கோரிக்கையில் சேர்க்கப்பட்டிருக்கின் றன என்பதை முதலில் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

கடந்த இருபது ஆண்டுகளாக ஆதித்திராவிட மக்கள் எந்த வகையிலும் முன்னேற்றம் அடையாமல் கண்ணீர் சிந்திக் கொண்டிருந்தார்கள். ஆதித் திராவிட மக்களுக்காக காலம் எல்லாம் உழைத்து, கண்ணீர் சிந்திக் கொண்டு வருகிற திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி பீடத்திற்கு வந்த பிறகு கடந்த இரண்டு ஆண்டுகளாக ஆதித் திராவிட மக்களுக்கு உபகாரச் சம்பளங்களும், மற்ற பல சலுகைகளும் குறையில்லாமல் சிறப்பான முறையில் கிடைத்து வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆதித் திராவிட மக்களுக்காக ஆரம்பப் பள்ளிகள் இருப்பது போல் அவர் களுக்காக மாவட்டத்திற்கு ஒரு கல்லூரியை ஏற்படுத்தி ஆதித் திராவிட மக்கள் அனைவருக்கும் கல்லூரிகளில் இடம் கிடைக்கக் கூடிய ஒரு நிலையை உருவாக்க வேண்டும் என்று தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.